25.ஏப்ரல். 2022 பக்கங்கள்- 01




# தினப்புயல்

news THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 46

## பாடசாலை நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறும்

பாடசாலை நடவடிக்கைகள் இன்று (25) வழமை போன்று இடம்பெறும் என கல்வி அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். பல தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம் செய்ய திட்டமிட்டிருந்த போதிலும், ஆசிரியர்கள் இன்று பாடசாலைகளுக்கு வருவார்கள் என நம்புவதாக அமைச்சர் கூறினார்.

தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுப்பது ஆசிரியர்களின் உரிமையென்றாலும் பாடசாலை மாணவர்களை கருத்திற்கொண்டு இன்றைய தினம் பாடசாலைகளுக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதாக கல்வி அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று பல ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சங்கங்கள் தொழிற்சங்க போராட்டமொன்றை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளன.



## இலங்கையின் விளையாட்டு வீராங்கனை ஒருவர் தற்கொலை

பெண்களுக்கான 400 மீற்றர் தடை ஓட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பல பதக்கங்களை வென்ற கௌசல்யா மதுஷானி தற்கொலை செய்துகொண்டுள்ளார். குளியாப்பிட்டிய, தும்மலசூரிய பகுதியை சேர்ந்த 25 வயதுடைய இவர், சர்வதேச தடகளப் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். அவர் தனது வீட்டிற்குள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் 2014 ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் 400மீ தடகள ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம், 2016 தெற்காசிய விளையாட்டு சாம்பியன்ஷிப்பில் வெண்கலப் பதக்கம், தேசிய 400மீ தடகள ஓட்டம் சாம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கம் மற்றும் 13வது தெற்காசிய தடகள சாம்பியன்ஷிப்பில் வெள்ளிப் பதக்கத்தை வெற்றி பெற்றுள்ளார்.

## பிரதமரின் வீட்டுச் சுவரை எதிர்ப்பு பலகையாக மாற்றிய மாணவர்கள்

விஜேராம மாவத்தையில் உள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் சுவரில் பல்வேறு சுலோகங்களை எழுதி அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள் சுவரை எதிர்ப்பு பலகையாக மாற்றியுள்ளனர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று (24) பிற்பகல் கொழும்பு கோட்டையில் இருந்து காலி முகத்திடல் வரை பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களின் பங்குபற்றுதலுடன் ஆர்ப்பாட்ட பேரணி இடம்பெற்றது.



## உலக வங்கி, இலங்கைக்கு அவசர நிவாரண உதவி

இலங்கைக்கு அவசர நிவாரண உதவியை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. இதன் கீழ் முதலாவதாக அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும். அந்த நிதியினை உலக வங்கியின் கொவிட் சுகாதார செயற்றிட்டம் வழங்கயுள்ளது.

உணவுப் பயிர் உற்பத்திக்கான விதைகள், உரம் என்பவற்றைப் பெறுவதற்கு இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க உள்ளதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது. தற்போதைய நெருக்கடி நிலையில் வறுமைக்கு உட்பட்டவர்கள், அனர்த்த நிலையை எதிர்கொண்டுள்ளவர்களை பாதுகாப்பதை முக்கிய பொறுப்பாக கருதுவதாக உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.




**அரிசி, கோதுமை மா, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு மீண்டும் நிர்ணய விலையை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நிதியமைச்சருடன் அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் குணபால ரத்னசேகர தெரிவித்தார்.**

**ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையினால், அத்தியாவசிய பொருட்களுக்கு நிர்ணய விலையை அறிமுகப்படுத்துவதில் பிரதான சவாலாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**